23

# கோளுரை

மதியை மதித்தவன்
வானத்தில் ஏறி
மதியை மிதித்துவந்தான் - தலை
விதியை நம்பி
விழுந்தவனே! நீ
விழுந்தே கிடக்கின்றாய்

வெற்றி எழுத்தாய்
வியர்வையைக் கொண்டவன்
விதியை எழுதுகிறான் - பொய்
நெற்றி எழுத்தை
நம்பியவன் நீ
நீரில் எழுத்தானாய்

கைகளில் தான் உன்
வருங்காலம் அது
கைகளின் சக்தியிலே - வெறும்
பொய்களின் வழியில்
போனவனே! அதை
ரேகையில் தேடுகிறாய்

கோளும் நாளும்
குறித்தது ராமன்
கொற்றவன் ஆவதற்கு - அந்த
நாளில் என்ன
நடந்தது? பாவம்
நடந்தான் காட்டுக்கு

காலம் பார்த்து
நடந்தது தானே
கண்ணகி கல்யாணம் - அவள்,
கோலம் இழந்து
கொண்டதுவோ மலர்க்
குங்கும அலங்கோலம்.


இலவச விநியோகத்திற்காக

சாதகம் பார்த்தாய்
சகுனம் பார்த்தாய்
சகலமும் பார்த்தாயே - ஒரு
பாதகம் இன்றி
வாழ்ந்தாயா? வெறும்
பயத்தால் சாகின்றாய்

அழுவது சிலநாள்
சிரிப்பது சிலநாள்
அனைவர்க்கும் உள்ளதுதான் - கதை
முழுவதும் உனக்கு
முன்னால் தெரிந்தால்
மூச்சில் சுவை ஏது?

*- டாக்டர் அப்துல் ரகுமான்*
'சுட்டுவிரல்'


இலவச விநியோகத்திற்காக